செ.வெ.எண் 444                                                                 நாள்: 13.07.11

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (13.7.2011) தலைமைச் செயலகத்தில், உலக சதுரங்க கூட்டமைப்பின் (World Chess Federation) தலைவர் திரு கிர்சன் இலயும்ழினோவ் (Mr. Kirsan Illyumzhinov) அவர்கள் சந்தித்தார். அப்போது, 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் / மே மாதத்தில் நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் பட்டத்திற்கான (World Chess Championship Title) போட்டியினை சென்னையில் நடத்தும்படி வேண்டுகோள் விடுத்தார்.

இதுவரை இந்தியாவில் சதுரங்கப் போட்டிகளில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற 24 பேரில் 10 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். உலக சதுரங்கத்தில் இந்தியா 7-வது இடத்தைப் பெற்றுள்ளது. 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் / மே மாதத்தில் நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் பட்டத்திற்கான (World Chess Championship Title) போட்டி, தற்போதைய உலக வாகையரான (Defending World Champion) கிராண்ட் மாஸ்டர் விசுவநாதன் ஆனந்த் மற்றும் இஸ்ரேலைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் போரிஸ் கெல்ஃபேண்டு (Boris Gelfand) ஆகியோரிடையே நடைபெறும்.

இந்தப் போட்டியை 2012 ஆம் ஆண்டு சென்னையில் நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்து ஆணையிட்டுள்ளார்கள்.உலக சதுரங்க வாகையர் பட்டத்திற்கான (World Chess Championship Title) போட்டி இதுவரை இந்தியாவில் நடைபெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டிக்கான செலவு சுமார் 20 கோடி ரூபாய் ஆகும்.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

நாள்: 13.7.2011